258, எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# யூனிலீவர், இலங்கையிலுள்ள பணியகங்களில் மிகவும் பெண்கள் நலன் சார்ந்த நிறுவனக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது

*Women Friendly Workplace Awards 2022 விருதுகள் நிகழ்வில் பிரகாசித்துள்ளது*

**கொழும்பு, நவம்பர் 02 2022:** யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம் அண்மையில் AICPA, CIMA மற்றும் SATYN சஞ்சிகையின் 2022 Women Friendly Workplace Awards விருதுகள் நிகழ்வில், 'இலங்கையிலுள்ள பணியகங்களில் மிகவும் பெண்கள் நலன் சார்ந்த நிறுவனக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நிறுவனம்' என முடிசூட்டப்பட்டது. நிறுவனம் 'இலங்கையின் மிகச் சிறந்த பெண்கள் நலன்சார்ந்த பணியிடங்களில் ஒன்றாகவும்' அங்கீகரிக்கப்பட்டது. பெண்கள் தங்கள் தொழில் மற்றும் வாழ்வில் செழிக்க அதிக உள்ளடக்கம், மேம்பாடு மற்றும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

Women Friendly Workplace Awards விருதுகள் நிகழ்வானது, பணியிடத்தில் பெண்களுக்கு வலுவூட்டல் மற்றும் ஆதரவளிப்பதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கிறது. அத்துடன், ஐக்கிய நாடுகள் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கு 5: பாலின சமத்துவம் என்பதை ஊக்குவித்து, நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பான மற்றும் செழிப்பான பணியிடத்தை உறுதி செய்வதை முன்னெடுக்கும் நிறுவனங்கள் இதன் மூலமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

இந்த விருது குறித்து **யூனிலீவர் ஸ்ரீலங்காவின் மனிதவளத்துறைப் பணிப்பாளரான அனன்யா சபர்வால்** அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், *"இந்த மதிப்பிற்குரிய அங்கீகாரத்தைப் பெறுவதில் நாங்கள் பணிவும், பெருமையும் கொள்கிறோம். மேலும் எங்களது முயற்சிகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் அதற்கான மேடையை ஏற்படுத்தித்தந்த AICPA, CIMA மற்றும் SATYN ஆகியவற்றுக்கு எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். பெண்கள் மற்றும் பலதரப்பட்ட குழுக்களை ஆதரிக்கும் வகையில், அர்த்தமுள்ள கொள்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பல தசாப்தங்களாக பணியிடத்தில் சமத்துவம், பன்மைத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை வளர்ப்பதற்கு நாங்கள் முயற்சித்து வருகிறோம். நாம் ஏற்கனவே கொண்டுள்ள துன்புறுத்தலுக்கு எதிரான கொள்கையைத் தவிர, கடந்த ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தில், கருவுறுதல் ஆதரவுக் கொள்கை மற்றும் குடும்ப வன்முறைக்கான உதவிக் கொள்கை ஆகியவற்றை அறிமுகப்படுத்தினோம். இந்த ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தில், எங்கள் மருத்துவ லீவுக் கொள்கையின் ஒரு பகுதியாக மாதவிடாய் விடுமுறையை அறிமுகப்படுத்தி, நிறுவனத்தின் செலவில் எங்கள் அலுவலகம் மற்றும் தொழிற்சாலைகள் முழுவதும் சுகாதார அணையாடைகளைக் கிடைக்கச் செய்வதன் மூலம் #BreaktheBias (பக்கச்சார்பினைப் போக்குதல்) மற்றும் #MenstrualHealth (மாதவிடாய் கால சுகாதாரம்) பற்றிய களங்கத்தை முடிவுக்கு கொண்டுவர முடிவு செய்தோம். எங்களிடம் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஏனைய உள்ளடக்கம் சார்ந்த கொள்கைகளில், பணியாளர்கள் தங்களை முழுமையாக தங்கள் வாழ்க்கையிலும் பணியிலும் கொண்டு வர உதவும் வகையில், தொழில் இடைவிடுப்புக் கொள்கை (Career Break Policy) போன்றவை அடங்கியுள்ளன. தன்னார்வத் தொண்டு செய்வதற்கும், உலகினை அனுபவிக்க பிரயாணம் செய்வதற்கும், மேம்பட்ட யோகா பயிற்சிநெறிகளைத் தொடருவதற்கும், ஒரு மனிதப்பிறவியாக என் மீது உண்மையிலேயே முதலீடு செய்வதற்கும் எனக்கு இடமளிக்கும் இந்த தொழில் இடைவிடுப்புக் கொள்கையால் நான் கூட பயனடைந்தேன்,"* என்று குறிப்பிட்டார்.

யூனிலீவர் ஸ்ரீலங்கா பெண்களை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தி, அவர்களின் தொழில் வாழ்க்கையில் வெற்றிபெற வழிசெய்கிறது. நிறுவனத்தின் பெண் பணியாளர்கள், கவனமாகக் கட்டமைக்கப்பட்ட, பக்கச்சார்பற்ற தொழில் மேம்பாட்டுச் செயல்முறையின் மூலம் சிரேஷ்ட தலைமைப் பதவிகளை ஏற்கும் வகையில் சீர்படுத்தப்பட்டு, மேம்பாட்டுத்திட்டத்திற்காக வழி செய்யப்பட்டுள்ளனர். அதன் 80% பெண் முகாமையாளர்கள் வெளிநாடுகளுக்கு மேம்பாட்டுப் பயணங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

**யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹஜார் அலா.ஃபிபி** அவர்கள் இது தொடர்பில் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கையில், *''எல்லா நபர்களும் நியாயமாகவும், கண்ணியத்துடனும் நடத்தப்படும் மற்றும் அவர்களின் தனித்துவம் போற்றிக் கொண்டாடப்படும் கலாச்சாரத்தை வளர்ப்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக உள்ளோம். எனவே, எங்கள் தலைமைத்துவத்தில் பலதரப்பட்ட பிரதிநிதித்துவத்தை விரைவுபடுத்துவதற்கான தெளிவான இலக்குகளை நாங்கள் நிர்ணயித்துள்ளதுடன், அவற்றில் சிலவற்றை ஏற்கனவே அடைந்துள்ளோம். கடந்த ஆண்டில் எங்கள் நாட்டின் நிர்வாக முகாமைத்துவ அணியில் 55% பேர் பெண்கள் என்பதுடன், நாங்கள் எமது நிர்வாக முகாமைத்துவ ஊழியர்களிடையே முதல் முறையாக பாலின சமநிலையில் 40% என்ற இலக்கினைத் தாண்டியுள்ளோம். மேலும், 2025 ஆம் ஆண்டுக்குள் 50-50 பாலின சமநிலையை எட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். எல்லா வேறுபாடுகளுக்கும் அப்பால் நாம் உண்மையிலேயே ஒத்துழைக்கக்கூடிய சூழலை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம்,''* என்று குறிப்பிட்டார்.

2021 ஆம் ஆண்டில், யூனிலீவர் தனது ஹொரணை தொழிற்சாலை பணித் தளத்தில் 27 பெண் ஊழியர்களை பணிக்கு அமர்த்துவதன் மூலம் நிறுவனத்தின் பன்மைத்துவ வரலாற்றைத் தோற்றுவித்தது. கடந்த சில ஆண்டுகளில், நிறுவனம் அதன் முதல் பெண் தொழிற்சாலை முகாமையாளர் மற்றும் முதல் பெண் பிராந்திய விற்பனை முகாமையாளர் நியமனத்தையும் கண்டுள்ளது. இந்த சாதனை இலக்குகள் பாரம்பரியமாக ஆண் ஆதிக்கம் செலுத்தும் தொழில்களில் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் அதே வேளையில், பாரம்பரிய பாலின பழமைவாதங்களைப் போக்க நிறுவனத்திற்கு உதவியுள்ளது.

நிறுவனம் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்ட மகப்பேறு லீவு மற்றும் 3 வாரங்களுக்கு தந்தைக்கான மகப்பேற்று லீவு வழங்குவதன் மூலம் புதிதாக குழந்தை பெற்ற பெற்றோருக்கு ஆதரவளிக்கிறது. புதிதாக குழந்தை பெற்ற தாய்மார்கள் மகப்பேறு முடிந்து பணிக்குத் திரும்பும் போது பணியில் சரியான ஆதரவு கட்டமைப்பு இருப்பதை உறுதிசெய்யும் ஒரு 'நட்பு அமைப்பு' (buddy system) ஏற்பாடும் உள்ளது. யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம், பணிபுரியும் போது குழந்தைப் பராமரிப்பு உதவி தேவைப்படும் பணிபுரியும் பெற்றோருக்காக கட்டமைக்கப்பட்ட முன்பள்ளி கல்வி முறையை உள்ளடக்கிய தனது குழந்தை காப்பக வசதியை சமீபத்தில் மீண்டும் திறந்துள்ளது. மாற்றுத்திறனாளிகளாக உள்ள குழந்தைகளுக்கும் இங்கு வசதிகள் உள்ளன.

யூனிலீவர் தனது சொந்த ஊழியர்களின் நலனுக்கு அப்பாலும் செயற்பட்டு, பெண்களுக்கு வலுவூட்டுகின்ற வகையில் நிறுவனத்தின் பிரதானமான பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டமான 'சௌபாக்யா' காணப்படுகின்றது. இது 5,000 பெண்களுக்கு அவர்களின் சமூகங்கள் மத்தியில் யூனிலீவர் நிறுவனத்தின் தயாரிப்புகளை விற்பனை செய்வதன் மூலம் நிலைபேற்றியல் கொண்ட வாழ்வாதாரத்தை வழங்குகிறது. இந்த முயற்சியானது 2020 ஆம் ஆண்டின் சிறந்த நிறுவன நிலைபேற்றியல் விருதுகளில் (Best Corporate Citizen Sustainability Awards) 'சிறந்த நிலைபேற்றியல் செயற்திட்டங்கள்' (Best Sustainability Projects) பிரிவில் சிறப்புவிருதை வென்றது.

**~முற்றும் ~**